# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர் : 10 இதழ் : 1 ஜனவரி 2024 தனிபிரதி – ரூ. 20/– ஆண்டு சந்தா – ரூ. 200/–

Vol : 10 Issue No : 1 January 2024 Single Copy - Rs 20/- Annual Subscription - Rs. 200/-






அன்பரின் ஊழியத்தின் பாசமிகு பங்காளர்களுக்கு

# இனிய புத்தாண்டு
# நல்வாழ்த்துக்கள்
# 2024






# அன்பரின் ஊழியம்

## ஆசிரியர் உரை...

**பிரியமானவர்களே, உங்கள் ஒவ்வொருவருக்கும் மகிழ்ச்சியான 2024-ம் ஆண்டு வாழ்த்துக்கள்!**

2023-ம் ஆண்டு முழுவதும் நம்மை சுக, பெலத்துடன் பாதுகாத்து நடத்தி புதிய ஆண்டில் பிரவேசிக்கச் செய்த நம் தேவாதி தேவனை துதிப்போம். ஸ்தோத்தரிப்போம். நன்றியுள்ளவர்களாய் ஜீவிப்போம். எதிர்பாராத போர்களும், நம்மை விழுங்கும் வஞ்சனைகளும், சாத்தானின் ஆக்ரோஷங்களும் நம்மை சூழ்ந்திருந்தாலும் அவர் நம்மை பாதுகாத்து, தம் பிள்ளைகளாக நிலை நிறுத்தியமைக்காக கர்த்தரை துதிப்போம், ஸ்தோத்தரிப்போம்.

இந்த புதிய ஆண்டிலும் தேவன் உங்களை தம் கரத்தின் நிழலினால் மறைத்து ஆசீர்வதித்து பயன்படுத்துவார். ஒவ்வொரு வருடமும் நாட்கள் செல்லச்செல்ல வேதாகம தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் நிறைவேறிக் கொண்டிருப்பதையும், இந்த உலகத்தின் முடிவு வெகு சமீபத்தில் இருப்பதையும் நாம் பார்க்கிறோம். அநேகர் இயேசுவை வேண்டாம் என்று சொல்லி விலகிப்போவதையும் நாம் காண்கிறோம். நமக்கோ அசையாத என்றும் நிலைத்திருக்கும் நம்பிக்கையாக இயேசு இருக்கிறார்.

நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். எபே.5:16. பவுல் அப்போஸ்தலன் கூறினதுபோல வரும் நாட்களில் மிக மிக அதிகமான பொல்லாங்கான காரியங்களை நீங்கள் காண்பீர்கள். உலகமெங்கும் இருள், கண்ணீர், பஞ்சம், பட்டினி, கொடுமை போன்றவைகளை நாம் பார்க்கத்தான் போகிறோம். வெளிப்படுத்தல் 9 மற்றும் 6-ம் அதிகாரங்களில் வாசிக்கிறபடி பிசாசானவன் மக்களை உபத்திரவப்படுத்தவும், கொலை செய்யவும் தேடி அலைவான். பிசாசின் ஆக்ரோஷமான சேனை உலகின் ஒவ்வொரு முக்கு மூலையிலும் அதிகாரத்துடன் செயல்படும். ஆனாலும் கலங்காதீர்கள், தேவன் நம்மை தம்முடைய கரத்தின் நிழலில் மறைத்துக் கொள்வார்.

**நான் வானத்தை நிலைப்படுத்தி, பூமியை அஸ்திபாரப்படுத்தி, சீயோனை நோக்கி:**
**நீ என் ஜனமென்று சொல்வதற்காக,**
**நான் என் வார்த்தையை உன் வாயிலே அருளி,**

**என் கரத்தின் நிழலினால் உன்னை மறைக்கிறேன். ஏசாயா 51:16**

ஆசிரியர்/வெளியிடுபவர்: **Dr. ஜேன் ஜாஷ்வா**

**சந்தா விபரம்**

இந்தியா: ஆண்டு சந்தா ரூ.200/- ஆயுள் சந்தா ரூ.2000/-
வெளி நாடு: ஆண்டு சந்தா ரூ.1500/- ஆயுள் சந்தா ரூ.15000/-

காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை
ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசிஎண்: 9488845627
**Telugu & Hindi: 99445 36343, Malayalam: 94889 32937, Kannada: 90031 17205**
**e-mail:** info@mojindia.org **Website:** www.ministryofjesus.in
முகவரி: அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம், 10-வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி-18
Address: Ministry of Jesus Prayer Centre, 10th Cross Street West Extension, Thillainagar, Trichy - 620018

சிறு பூச்சியாயிருந்தும் இருளில் ஒளி கொடுத்து, இருளை பிரகாசிக்கப் பண்ணுகிற மின்மினி பூச்சிகளைப் போல கர்த்தர் நம்மை வைத்திருக்கிறார். அவரே நமக்குள் ஒளியாயிருக்கிறார். அந்த ஒளி ஒருபோதும் எடுபடாது, மங்காது, ஒருவராலும் அந்த ஒளியை அணைக்க முடியாது. கிறிஸ்துவின் ஒளி தம்முடைய ஜனங்களின் மூலமாய் இருண்ட உலகத்தில் தொலைந்துப்போன, பயந்துப்போயிருக்கிற மக்களுக்கு ஜீவ வழியைக்காட்டி ஜீவன் தப்ப ஓடுவதற்கு உதவியாக அமையும்.

ஏசாயா 60:20–ன்படி கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமாயிருப்பார். உங்கள் ஒவ்வொருவரையும் கர்த்தர் தம்முடைய கரத்தின் மறைவில் வைத்து நடத்துவார், சந்தோஷப்படுத்துவார். தேவ கிருபை, தேவ சமாதானம் உங்கள் அனைவரோடும் இருப்பதாக!

## இம்மாத வாக்குத்தத்தம்

**ஏசாயா 41:10**
**யோசுவா 1:9**
**ஆபகூக் 3:19**
**ஏசாயா 51:16**

கடந்த மாதத்தில் ஊழியத்தின் தேவைகளுக்காகவும், S.J.Saves Trust-ன் தேவை களுக்காகவும் கொடுத்து உதவின உங்கள் ஒவ்வொருவருக்கும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிகளை கூறிக்கொள்கிறேன்.

உங்களுடைய அனைத்து தேவைகளின் மத்தியிலும் நீங்கள் அவருடைய இராஜ்ய பாரத்திற்காக கொடுத்த உற்சாகமான காணிக்கையை கர்த்தர் மனதில் வைத்து உங்களை ஆசீர்வதிப்பாராக! தொடர்ந்து ஊழியத்திற்கு உதாரத்துவமாய் கொடுத்து தாங்குங்கள்.

ஜனவரி மாதம் திருச்சி, மேற்கு தாம்பரம், வேலூர், ஈரோடு, நாகர்கோவில், சென்னை, விஜயவாடா, செகந்திராபாத் ஆகிய இடங்களில் நடைபெறயிருக்கிற அனைத்து கூட்டங்களுக்காகவும் ஜெபியுங்கள். நீங்கள் இருக்கிற பகுதியில் கூட்டங்கள் நடைபெறும்பொழுது அந்த கூட்டங்களில் தவறாமல் பங்குபெறுங்கள். கூட்டங்களில் கலந்துக்கொண்டு புது வருட ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளுங்கள். உங்கள் உறவினர்கள், நண்பர்களையும் கூட்டத்திற்கு அழைத்து வாருங்கள்.

புத்தாண்டு வாக்குத்தத்த செய்திகள் அனைத்தும் **Ministry of Jesus You Tube** சேனலில் வெளிவரும். சமூக வளைதலங்கள் வாயிலாக வெளிவருகிற பாடல், அனுதின அற்புதம் மற்றும் புதிய நிகழ்ச்சிகளை பாருங்கள். அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சிகளை இன்னும் அதிகரிக்க ஜெபியுங்கள்.

S.J.Saves Trust-ல் உள்ள பிள்ளைகளுக்காக ஜெபியுங்கள். S.J.S.T. மருத்துவமனைக்காக விசேஷமாக ஜெபியுங்கள். மருத்துவமனையைக் குறித்து கர்த்தர் கொடுத்திருக்கிற தரிசனம் நிறைவேறவும் ஜெபியுங்கள். தாங்குங்கள். எங்கள் அப்பா, அம்மாவின் நல்ல சுகத்திற்காகவும், அவர்களுடைய நல்ல ஆரோக்கியத்திற்காகவும் ஜெபியுங்கள். எங்கள் அனைவருக்காகவும் ஜெபியுங்கள். ஊழியத்தில் உங்களுடைய ஜெபம் எங்களை அதிகமாக தாங்கும்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து காப்பாராக!

**விஜயவாடாவில்**

**அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்**

ஜனவரி 14 (ஞாயிற்றுகிழமை)

மாலை 4:00 மணி முதல் இரவு 8:30 மணி வரை

ஹோட்டல் அமிலாபுரம் கன்வென்ஷன் ஹால்,
இரயில்வே ஸ்டேஷன் ரோடு, காந்தி நகர், விஜயவாடா.

தேவ செய்தியாளர்கள்

Dr. ஆனந்த ஸ்திரா, Mrs. மார்கிரேட் ஸ்திரா

(கூட்ட முடிவில் தனிஜெபம் ஏறெடுக்கப்படும்)



தொடர்புக்கு : 99445 36343,94888 45627,



# சகாயம் கிடைக்கும் புத்தாண்டு

புத்தாண்டுச்செய்தி : Dr. ஆனந்த ஸ்திரா

நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன் – ஏசாயா 41 : 10

உன்னில் மீதியாயிருப்பவர்கள் நன்மையடைவார்கள்; தீங்கின் காலத்திலும் நெருக்கத்தின் காலத்திலும் உனக்காக நான் சத்துருவுக்கு எதிர்ப்பட்டு, உனக்குச் சகாயஞ் செய்வேன் என்று மெய்யாகவே சொல்லுகிறேன்

– எரேமியா 15 : 11

கிறிஸ்துவுக்குள் எனக்கு அருமையான சகோதர, சகோதரிகளே!

உங்கள் அனைவருக்கும் எங்கள் இனிமையான புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்! வருஷங்களை தமது நன்மையால் முடிசூட்டும் தேவன் இந்த வருடத்தின் முதல் நாள் துவங்கி, தம்முடைய ஒப்பற்ற, அளவற்ற கிருபையினாலும், இரக்கத்தினாலும் உங்களை முடிசூட்டுவாராக.

முதலாவதாக, பயங்கரமான வெள்ளத்திலும், இடி மழையிலும் முழ்கி கஷ்டப்படுகிற மக்களுக்காக நான் ஊக்கமாய் ஜெபிக்கிறேன். இந்த பத்திரிக்கை ஆயத்தமாகும்பொழுதே நம் தமிழ்நாட்டில் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், தென்மாவட்டங்களான தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரியின் சில பகுதிகளில் கஷ்டப்படுகிற மக்களுக்காக அதிகமாய் ஜெபிக்கிறேன். கர்த்தர் தாமே அவர்களை பாதுகாப்பார். (ஏசாயா 25:4; 32:2)

விசேஷமாக நமது ஊழியத்தை தாங்குகிற பங்காளர்கள் ஒவ்வொருவரையும் கர்த்தர் இந்த பயங்கரமான வெள்ள சேதத்திலிருந்து விடுவித்து, நல்ல சுகத்துடன் பாதுகாக்க நாங்கள் குடும்பமாக ஜெபிக்கிறோம். சோர்ந்து போகாதீர்கள்! நீதிமானுக்கு ஒரு கேடும் வராது (நீதி. 12:21; கர்த்தருக்கு பயப்படுகிறவர்களுக்கு ஒரு தீமையும் வராது (நீதி. 19:23) மோசேயை கொண்டு செங்கடலை பிளந்து இஸ்ரேல் ஜனங்களை வழி நடத்தின தேவன் தாமே உங்களோடு இருக்கிறார். காற்றையும் கடலையும் பார்த்து தமது வார்த்தையால் அதட்டிய இயேசு உங்களை பாதுகாப்பார். கலங்காதீர்கள்! இழந்த எல்லாவற்றையும் அவர் திரும்பவும் உங்களுக்கு தருவார். (சங்கீதம் 90:15–17; ஏசாயா 59:19)

நமது காலங்கள் அவருடைய கரங்களில் இருக்கின்றபடியால் நிச்சயமாய் அவர் தம்மை நம்பும் மக்களுக்கு நன்மையானதை தருவார். (சங்கீதம் 65:11; 85:12) யார் யார் எல்லாம் உன்னதமான தேவனை தங்கள் நம்பிக்கையாக கொண்டிருக்கிறார்களோ அவர்களை வற்றாத ஜீவ நதியின் கரைகளில் உள்ள கனி தரும் விருட்சங்களை போல எந்த சூழ்நிலையிலும் செழிக்க செய்வார்.

தேவனாகிய கர்த்தர் நல்லவரும், நன்மை செய்கிறவருமாய் இருக்கிறார். (சங்கீதம் 119:68) நமது காலங்கள் அவரது கரங்களில் இருக்கிறது. ஒவ்வொரு நாளும் காலை எழுந்தவுடன் அந்த நாளை நாம் காணும்படி கிருபை செய்த தேவனை துதிக்க வேண்டும். ஏனென்றால், நம் ஒவ்வொருவருடைய மூச்சும் அவர் கரத்தில் இருக்கிறது. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வருடமும் அவருடைய கணக்கில் உள்ளது.

தேவனாகிய கர்த்தர் ஒருவருக்கு தான் இந்த பூவுலகில் நாம் எவ்வளவு நாட்கள் வாழப்போகிறோம் என்பது தெரியும். நமக்கு அவைகள் தெரியாது. ஒன்றை மாத்திரம் நாம் அறிகிறோம். ஒவ்வொரு ஆண்டையும் நாம் கடந்து வரும்பொழுது முதலாவது கடந்த ஆண்டு முழுவதும் நம்மை பத்திரமாய் வழிநடத்தி பலவிதமான தீய சோதனைகள், கடுமையான நோய்கள், வறட்சிகள் பலவித குறைபாடுகள், சோர்வுகளிலிருந்தும், சேதங்களிலிருந்தும் நம்மையும் நம் குடும்பத்தையும் காத்த அவரை நாம் துதிக்க வேண்டும்.

கடந்த மூன்று ஆண்டுகளாக நாம் அறிந்து நம்மில் எத்தனையோ பேர் எதிர்பாராத மரணத்தை அடைந்துள்ளனர். எத்தனையோ குடும்பங்களில் சமாதானம், ஆசீர்வாதம், எதிர்பாராத நன்மைகள்

கிடையாமல் மிகவும் தவித்துள்ளனர். ஆனால் அவரை உத்தம இருதயத்தோடு பின்பற்றுகிற, அவரையே தன் நம்பிக்கையாக கொண்டு இருக்கிற, இரவும் பகலும் அவரது வேதத்தை தியானிக்கிற மக்களாகிய உங்களையும், என்னையும் அவர் பாதுகாத்துள்ளார். ஆகவே அவர் செய்த சகல நன்மையை நினைத்து அவரை ஸ்தோத்தரிப்போம். (சங்கீதம் 1:1–3; எரேமியா 17:7,8)

இந்த ஆண்டின் முதல் நாளில் அடியெடுத்து வைக்கும் நேரத்தில் நாம் அவர் சமூகத்தை தேடி ஆலயங்களுக்கு சென்று அவரை துதித்து, நமக்கு அவர் தரும் வாக்குத்தத்தங்களை பெற்றுக் கொள்வோம்.

ஆலயத்திற்கு போக முடியாத நிலையில் உள்ள வயதானவர்கள் மற்றும் படுக்கையில் இருப்பவர்கள் கலங்கவேண்டாம். பரிசுத்த ஆவியின் ஏவுதலால் தேவனுடைய ஊழியர்கள் கொடுக்கும் வாக்குத்தத்தங் களை நம்பி அதை விசுவாசித்து, ஜெபித்து, ஸ்தோத்தரித்து புது வருடத்தை ஆரம்பியுங்கள்.

கர்த்தருடைய நாள் மிகவும் சமீபமாய் இருப்பதை உலகம் எங்கும் நடக்கின்ற காரியங்களால் நாம் அறிகிறோம். (தானியேல் 12:10c) உலகம் தன்னுடைய ஞானத்திலும், அறிவு கூர்மையிலும் பல புதுப்புது கண்டுபிடிப்புகளினால், நட்சத்திரங்களிலும் கூடு கட்டும் அளவிற்கு (ஒபதியா 1:4) முன்னேறினாலும், ஏராளமாய் சம்பாதித்தாலும் மிகப்பெரிய புகழை பெற்றாலும், முன்னேற்றங்களை அடைந்தாலும், தேவனுடைய பார்வையில் உலகத்தின் துன்மார்க்கமான நிலைகள் மற்றும் பாதுகாப்பற்ற நிலைகள் அதிகரித்துக்கொண்டு போவதை நாம் நன்கு அறிகின்றோம். (ஆதி. 6: 11–13)

நன்மையை பார்க்கிலும் தீமையும், பகைமையும், கொடுமைகளும், யுத்தங்களும், அநீதிகளும், ஏதேச்சதிகாரங்களும், பேராசைகளும், கர்த்தருக்கு விரோதமான பாவங்களும் துணிகரமாய் பெருகிக்கொண்டு தான் போகிறது. ஆனால் தேவனை உத்தமமாய் பின்பற்றி அவரை நேசிக்கிற உங்களையோ எல்லா தீமையிலிருந்தும் அவர் காப்பார் (ஏசாயா 31:5)

தேவ கோபாக்கினை, இயற்கை சேதங்கள், நாடுகளுக்குள் ஏற்படுகிற சண்டைகள், உள்நாட்டு கலவரங்கள் மற்றும் உங்கள் பக்கத்தில் ஆயிரம் பேரும்,உங்கள் வலது பக்கத்தில் பதினாயிரம் பேரும் விழுந்தாலும் அது உங்களை ஒன்றும் செய்யாதவாறு கர்த்தர் பாதுகாப்பார். ஏனெனில், அவர் தமது சிறகுகளாலே உங்களை மூடுவார். பறந்து காக்கும் பட்சிகளை போல தமது செட்டைகளின் நிழலில் உங்களை காத்து எல்லா தீமைக்கும் தப்புவிப்பார். அவருடைய சத்திய வேத வாக்குகளும், விசுவாசமும் அவருடைய மகத்துவமும் உங்களை பாதுகாக்கும். சங்கீதம் 91 மற்றும் ஏசாயா 31:5, சங்கீதம் 121:4 முதல் 8 வசனங்களை ஆழ்ந்து படித்து, தியானித்து, ஜெபித்து நாட்களை ஆரம்பியுங்கள்.

ஒருவேளை இப்பொழுதும் கர்த்தருடைய இரண்டாம் வருகை வருமானால் அதற்கும் ஆயத்தமாக இருங்கள். ஏனென்றால், அவர் வரும் நாழிகையையும், நேரத்தையும் பிதா தவிர ஒருவரும் அறிய மாட்டார். எனவே கர்த்தர் இயேசு நமக்கு சொல்லிக்கொடுத்தபடி எப்போதும் அவரோடு பேசி ஜெபித்துகொண்டே இருப்போம். (லூக்கா 21:35, 36) அப்பொழுது நீங்கள் கர்த்தருக்கு பிரியமில்லாத, எல்லா வேண்டாத காரியங்களுக்கும், வீணான வார்த்தைகளுக்கும், தீய எண்ணங்களுக்கும் விலக்கிக் காக்கப்படுவீர்கள்.

மோசே, எலியா, யோபை போல அவரோடு பேசி அவருடைய வேதத்தின் வார்த்தைகளை முடிந்த அளவு தியானித்து செயல்படுங்கள். அப்பொழுது உங்கள் குடும்பங்களில் சமாதானம் பெரிதாயிருக்கும்.

ஏசாயா 48:17,18

இந்த ஆண்டு கர்த்தர் உங்களை பார்த்து, நீங்கள் பயப்படவும், திகைக்கவும் கூடாது என்று கூறுகின்றார். இதற்கு காரணம் யோசு வாவை போல உங்களுக்கு தேவன் கொடுத்த பெரிய பணியை நீங்கள் செய்ய வேண்டியிருக்கும். இதுவரைக்கும் உங்களை உபத்திரவப்படுத்தின எரிச்சலின் ஆவிகள், காரணமின்றி உங்களை சேதப்படுத்தும்படி போராடும் ஆவிகள் கடந்த ஆண்டில் பெருகி இருக்கலாம். ஆனால் கர்த்தரோ உங்களுக்கு துணை நின்று அவைகளை நீங்கள் தேடியும் காணாதபடிக்கு அதம் பண்ணுவார். அவர் உங்களுக்குக் கொடுத்த பெரிய பணி நிறைவேற்றி முடிக்கும்படி உதவி செய்வார். (யோசுவா 1: 5–9; சங்கீதம் 18:50; 2 தீமோ. 4:7,8) அவர் உங்கள் கரங்களை பிடிக்கும் பொழுது நீங்கள் தண்ணீர்களை கடந்தாலும், அக்கினியை கடந்தாலும் அவைகள் உங்களை சேதப்படுத்தாது. (ஏசாயா 43:1,2)

விசேஷமாக கர்த்தருடைய நாமத்தின் நிமித்தம், ஊழியத்தின் நிமித்தம் அதிகமாய் காரணமின்றி துன்புறுகிறவர்களை கர்த்தர் பாதுகாப்பார். கர்த்தர் கொடுத்த ஊழியங்களை அழிக்க நினைக்கிற, கர்த்தருக்கு விரோதமான வெறி பிடித்தவர்களின் கோஷத்தை சர்வ வல்லமையுள்ள தேவன் அடக்குவார். கர்த்தருடைய பயங்கரமான கோபாக்கினை அவர்கள் மீதும் அவர்களை சார்ந்தவர்கள் மீதும் வரும். பலவிதமான கொள்கை களினாலும், பிரிவினை சக்திகளாலும், ஜாதி, மத, இன வெறுப்புகளினாலும், கபடற்ற மக்களை துன்புறுத்து

கிறவர்கள் தேவனால் தண்டிக்கப்படுவார்கள். எங்கு பார்த்தாலும் இயற்கை சேதமும், அழிவும், வியாதிகளும் பெருகும். ஆனால் உங்களை கர்த்தர் தமது செட்டைகளின் மறைவில் காத்துக்கொள்வார்.

தொடர்ந்து அநேக தேவ பிள்ளைகள் பரலோகத்திற்கு மரணத்தின் மூலமாக எடுத்துக் கொள்ளப்படுவார்கள். ஒரு காலத்தில் துன்மார்க்க மாய் வாழ்ந்து, கர்த்தருடைய சிலுவையின் அன்பை ருசி பார்த்து அவரிடமாய் திருப்பப்பட்ட அநேக வாலிபர்கள் மற்றும் 2 வயது முதல் 12 வயது வரைக்கும் உள்ள சிறு பிள்ளைகள் மற்றும் வயதானவர்கள் மிகப்பெரிய அடையாளங் களையும், அற்புதங்களையும் இயேசுவின் நாமத்தில் செய்து தீர்க்கதரிசனம் சொல்வார்கள். ஏனென்றால், யோவேல் தீர்க்கதரிசி சொன்னபடி இனி வரப்போகிற காலம் தேவனுடைய இரண்டாம் வருகை அதிசீக்கிரமாய் வரப்போகும் காலமாக இருக்கும். காலம் இனி செல்லாது.

யோவேல் 2:28-32

உலகில் வாழும் அநேக மனிதர்கள் தேவன் என்று ஒருவர் இருக்கிறார் என்பதை முற்றிலும் மறந்து விடுவார்கள்.

நாஸ்திகர்கள் மற்றும் உண்மை தேவனுக்கு விரோதமான செயல்களில் ஈடுபடும் விஞ்ஞானிகளும் இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களை செய்து தாங்கள் உருவாக்குகிற நுண்ணறிவு ரோபோட்டுகளை கடவுளாக வணங்குவார்கள் அல்லது தன்னை நம்புகிற பிசாசின் சேனைகளை உண்மையான கடவுள் என நம்பி அவைகளின் தீய சக்திகளால் பெரிய காரியங்களை செய்வார்கள்.

கர்த்தருடைய வார்த்தையில் நிலைத்து நிற்பவர்கள், பரிசுத்த ஆவியில் நிலைத் திருப்பவர்கள், அவருக்குப் பயப்படும் பயத்தில் வாழ்கிறவர்கள் அனைவரும், ஒரு ஷணப் பொழுதில் தேவனுடைய அளவற்ற வல்லமையாலும், பரிசுத்த ஆவியானவருடைய பலத்தாலும் அவற்றை மேற்கொள்வார்கள்.

கடந்த ஆண்டு ஏழை மக்களுக்கும், சமுதாயத்தின் சமாதானத்தை கெடுத்து நிக்ரகம் செய்தவர்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாய் அநியாயமாய் தீமை செய்தவர்கள் தங்களுக்குள்ளேயே யோசபாத்தின் காலத்தில் நடந்தது போல கர்த்தருடைய பிள்ளைகள் துதிக்கும்பொழுது தங்களுக்குள்ளேயே பலவிதங்களில் கருத்து வேறுபாடு கொண்டு பிரிந்து செல்வார்கள் அல்லது அழிக்கப்பட்டு போவார்கள். தங்களை தாங்களே ஒருவரை ஒருவர் அழித்துக் கொள்வார்கள். (2 நாளா.20:20-27)

அநீதியாக தண்டிக்கப்பட்டவர்கள், அநியாயம் செய்து ஒதுக்கப்பட்டவர்கள் முன் நிலைக்கு வருவார்கள். உலகில் பெரும் பகுதியினர் மதம் என்னும் வார்த்தைக்கு மதிப்பளிக்க மாட்டார்கள். அதற்குப் பதிலாக கடவுளே இல்லை என்னும் நிலைக்கு மாறுவார்கள். ஏனென்றால், மக்கள் பரிசுத்த தேவனை எதிர்ப்பவர்களாகவும், அவர் தான் இந்த கஷ்டங்களுக்கு எல்லாம் காரணம் என்று எண்ணி அவரை விட்டு தூரம் போவார்கள்.

இஸ்ரேல் நாடு தொடர்ந்து பல நாடுகளின் பகையை பெறும். என்றைக்கு தாங்கள் குத்தின ஆண்டவராகிய இயேசுவை அவர்கள் நோக்கி பார்க்கிறார்களோ அன்றைக்குதான் அவர்களுக்கு விடுதலை கிடைக்கும். எனினும், இந்த தொடர் போராட்டத்தினால் அநியாயமாய் கொலை செய்யப்பட்ட (இருநாடுகளின்) குடும்பங்களின் ஆறுதலுக்காகவும், இப்படிப்பட்ட பயங்கரமான யுத்தங்கள் இனி உலகில் எங்கும் நடைபெறாதபடிக்கும், சமாதானத்திற்காகவும் ஜெபிப்போம். போரினால் அதிகமாய் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவும், இஸ்ரேல் பாதுகாக்கப்படவும் ஜெபிப்போம். விசேஷமாக தங்கள் இருப்பிடங்களை விட்டு அனாதைகளாக அலைகின்ற பாலஸ்தீன மக்களுக்காகவும் ஜெபிப்போம்.

அதி சீக்கிரமாய் தீவிரவாதிகளால் பிடிக்கப்பட்ட கைதிகள் அனைவரும் விடுதலை பெறவும், இருசாராரும் சமாதானமாய் வாழவும் ஜெபிப்போம். உக்ரைன், ரஷ்யா யுத்தம் சமாதானத்தில் முடியும்படி ஜெபிப்போம். ஏனென்றால், ரோமர் 16:20; எபேசியர் 2:14-16; ஏசாயா 9:6,7-ன்படி அவரே சமாதான பிரபு, சமாதானத்தை நிலைநாட்டுபவர்! மற்றவர்களை கொல்ல வேண்டும், இடங்களை ஆக்கிரமிக்க வேண்டும் என்பவர்கள் தேவனுடைய தண்டனையை பெற்று தாங்களாகவே அழிவதை நீங்கள் பார்ப்பீர்கள்.

அநேக நாடுகளில் ஆலயங்களே இருக்காது. மத நம்பிக்கைகள் ஒழிந்துபோகும் அதற்கு பதிலாக 2தீமோ. 3:1 முதல் 5 வசனங்கள் நிறைவேறும். சொல்ல வேண்டும் என்றால் கர்த்தர் இயேசு சொன்னபடி அவர் வருகைக்கு முன்னால் நோவாவின் காலமும் (மத்தேயு 24:36-39; லூக்கா 17:26-30) லோத்தின் காலத்தில் நடைபெற்ற அக்கிரமங்களும் உலகில் வாழும் அநேக மனிதரிடத்தில் அதிகரிக்கும்.

வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். சூரியனில், சந்திரனில் அடையாளங்கள் காணப்பட ஆரம்பிக்கும். (லூக்கா 21:15,27) சூரியனிலிருந்து வரும் அதிக வெப்பத்தினால் அண்டார்டிகா துருவம், ஆர்டிக் வட

துருவம், தென் துருவத்தில் இருக்கும் பனி மலைகள் உருகி கடலுக்கடியில் பூமி அதிர்ச்சி ஏற்பட்டு கடலின் ஆழங்கள் மேல்மட்ட பூமியாக மாறும். அப்படி மாறும்பொழுது ஏற்படுகிற பயங்கரமான கடலின் அலை மற்றும் தண்ணீரின் ஆற்றலினால் பெரிய இடங்கள் பிரிந்துவிடும். அநேக பட்டணங்கள் முழ்கிவிடும். தேசங்கள் பிரிக்கப்படும்!

கர்த்தருக்கு விரோதமாகவும், ஏழைகளுக்கு விரோதமாகவும் பலவித கொடுமைகள் செய்த அதிபதிகள் தண்டிக்கப்படுவார்கள். அவர்கள் நாடுகள் வேதாகமத்தில் பழைய ஏற்பாடு தீர்க்கதரிசிகள் கூறுகிறபடி ஆந்தைகளும், நரிகளும், ஓநாய்களும், மிருகங்களும் நடமாடும் இடமாய் மாறும். அவைகள் அநேகருடைய பிணங்களை சாப்பிடும். ஹிட்லரை போல, நெப்போலியனை போல ரோமப் பேரரசைப் போல என்னை ஒருவராலும் அசைக்க முடியாது என்று சொன்ன அநேகர் சடுதியான மரண நோயினாலும், வேதனையினாலும், திகிலாலும் இறந்து போவார்கள், தற்கொலையும் செய்வார்கள்.

பலவிதமான சட்டங்கள் மூலம் கர்த்தருடைய அன்பின் சுவிசேஷம் அறிவிக்கப் படாத இடங்களில் உள்ளவர்கள் மனம் மாறி, சட்டங்களை மாற்றி எங்களுக்காக ஜெபியுங்கள் என்று சொல்லும் நாட்கள் வரும்.

உங்கள் மூலமாக பெரிய ஒரு இரட்சிப்பு உங்களுக்கும், உங்கள் ஜனத்தாருக்கும் ஏற்படும். (எஸ்தர் 4:12) இந்த ஆண்டு கர்த்தர் எஸ்தர் ராஜாத்தியை போலும், நெகேமியா, எஸ்றாவை போலும் அநேகரை எழுப்புவார். அவர்கள் தங்கள் ஜீவனையும் பொருட்படுத்தாமல் உபவாச ஜெபத்தோடு அதி மேன்மையான கொடுமை செய்யும் அதிகாரங்களை வீழ்த்துவார்கள்.

ஏழைகளுக்கு விரோதமாக ஏற்படும் கொடுமைகள் நீக்கப்படும். தேவனால் தெரிந்து கொள்ளப் பட்டவர்கள் எபேசியர் 6:10-13ன்படி ஜெயிப்பார்கள்! இவர்கள் மூலமாக கர்த்தரை எதிர்த்தவர்களுடைய கடின உள்ளங்கள் கர்த்தருடைய பிள்ளைகள் மீது அன்பு கூற ஆரம்பிக்கும். எல்லா ஏழைகளையும் நேசிக்க துவங்குவார்கள். மனங்கலங்காதீர்கள்!

கர்த்தரோ பயங்கரமான பராக்கிரமசாலியாக தம்மை நேசிக்கிற மக்களுக்காக யுத்தம் செய்வார். (எரேமியா 20:10,11) அவர் உலக மக்களை போல பட்டயத்தாலும், ஈட்டியாலும், துப்பாக்கியாலும், குண்டு களாலும் யுத்தம் செய்பவர் அல்ல. தாவீது என்னும் இளைஞன் கோலியாத் என்னும் ராட்சதனை சந்திக்கும் பொழுது சொன்னது போல இஸ்ரவேலின் தேவனாகிய பரிசுத்த தேவனுடைய நாமத்தில் தோற்கடிக்கப்படுவார்கள் மனங்கலங்காதீர்கள்!

ஒருவேளை நீங்கள் மரண வியாதியாலோ அல்லது தீராத பிரச்சினையினாலோ மரணத்தை சந்திக்க நேரிட்டாலும் அதைக் குறித்து கலங்காதீர்கள்! உங்களை இயேசு தாமே தம்முடைய தூதர்களை அனுப்பி உங்கள் ஆத்துமாவை நிம்மதியாக, சமாதானமாக மிகுந்த மகிழ்ச்சியோடு தாம் வாசம் செய்யும் பரலோகத்திற்கு கொண்டு செல்வார்.

அன்புள்ளம் கொண்ட பெரியோர்களே! எவ்வளவு ஜெபித்தாலும் தீராத மரண வியாதியில் கஷ்டப்படு கிறவர்களே, மனங்கலங்காதீர்கள்! இந்த உலகத்தின் எல்லா மகிமையையும் விட பரலோக மகிமையை அளவிடவே முடியாது. அதைக் குறித்து நான் புத்தகமாக எழுதி முடித்து விட்டேன். அது விரைவில் வெளிவர உள்ளது. இந்த புத்தகத்தில் இதுவரைக்கும் நீங்கள் கேள்விப்படாத, எந்த தொலைக்காட்சியிலும் பார்த்திராத, அறிவிக்கப்படாத மகா மேன்மையான தேவனுடைய மகிமையை பற்றியும் உங்களுக்கு அவர் வைத்திருக்கிற ஆனந்த மகிழ்ச்சியான இடத்தை பற்றியும், உலகத்தின் முடிவை குறித்தும், தேவ தூதர்களை பற்றியும், பிசாசை பற்றியும், நரகம், பாதாளத்தை பற்றியும், மனுஷனுடைய ஆத்துமாவை குறித்தும் நன்கு தெளிவாக தெரிந்து கொள்ளலாம்.

இந்த புத்தகம் தமிழிலில் வெளிவர சுமார் 12 முதல் 20 லட்சம் தேவைப்படும். ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த பிறகு ஏனைய மொழிகளில் மொழி பெயர்க்கப்படும். இவைகளை கர்த்தரே எனக்கு 32-ம் வயதில் வெளிப்படுத்தினார். என்னிடம் உலகத்திலுள்ள ஒருவரும் மோட்சத்தை குறித்தோ அல்லது பரலோகத்தை குறித்தோ, யுனிவர்சை குறித்தோ, பாதாளம், நரகத்தை குறித்தோ, மரணத்தை குறித்தோ, மனித வாழ்க்கையை குறித்தோ தெளிவற்ற, தாங்கள் யூகித்த கருத்துக்களை கூறவே முடியாது. ஏனெனில் நானே மூன்று முறை மரித்து இயேசுவால் மீண்டும் உயிர் பெற்றவன். எனவே இந்த ஆண்டு இந்த புத்தகம் வெளிவரும்படி ஜெபியுங்கள்.

பிரியமான தேவ பிள்ளைகளே! இந்த இக்கட்டான காலங்களில் நெருக்கமான காலங்களில் கர்த்தர் நமக்கு எந்த விதத்தில் சகாயம் பண்ணுவார் என்பதை குறித்து பார்ப்போம்.

சகாயம் என்னும் வார்த்தைக்கு ஆங்கிலத்தில் Help என எழுதப்பட்டுள்ளது. ஆங்கிலத்தை விட மூல அரமிக் மற்றும் எபிரெய பாஷைகளில் சகாயம் என்னும் வார்த்தைக்கு உண்மையான மூலப் பொருள் "எப்போதும் நம்மை பாதுகாத்து, எல்லா விதத்திலும் நமக்கு உதவி செய்து, நம்மை உயிருக்கு உயிராய் நேசிக்கும் நண்பனை போல, எல்லா அழிவிலிருந்தும் பாதுகாத்து, நமக்கு

தேவையான எல்லாவற்றையும் நாம் எதிர்பார்ப்பதற்கும், விரும்புவதற்கும் அதிகமாய் கொடுத்து, நமக்கு விரோதமாய் எழும்புகிற சக்திகளிலிருந்து நம்மை விடுவித்து, மிகப் பெரிய பலத்த பாதுகாவலராகவும், எப்போதும் ஜெயம் பெறுகிற வெற்றி வேந்தராகவும், சிறுமையிலிருந்து நம்மை உயர்த்துகிறவராகவும், எல்லா இக்கட்டுகள், தடைகளை நீக்கி, அடிமட்டத்திலிருந்து வாழ்வின் உயர்விற்கு கொண்டு போவது" என்பது தான் அர்த்தம். இந்த ஆழ்ந்த அர்த்தத்தை உடைய வார்த்தை தான் சகாயம். அதையே எரேமியா 15:11; மற்றும் ஏசாயா 41:10 விளக்குகிறது. கர்த்தர் எப்படி நமக்கு சகாயம் செய்வார் என்பதை குறித்து சற்று தியானிப்போம்.

ஒரு காலத்தில் நாம் அவருக்கு விரோத மான சத்துருக்களாக, பாவிகளாக இருந்தோம். நம்மை இரட்சிக்கும் சகாய வேந்தராக தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை பூமிக்கு மனிதராக அனுப்பினார். நம்முடைய எல்லா பாவங்களையும், நோய்களையும், நம்மால் எதிர்க்க முடியாத மரணத்திற்கு அதிகாரியான சாத்தானை தமது காலின் கீழ் நசுக்கி, தம்முடைய இரத்தத்தால் நம் இதயத்தையும், மாம்ச சரீரத்தையும் கழுவி பரிசுத்த மாக்கி தேவனுக்கு உகந்த பிள்ளையாக நம்மை மாற்றினார். (ஓசியா 13:9; ரோமர் 5:6-9; 1யோவான் 4:8-10; வெளி. 1:6; 5:9)

நம்முடைய மழுங்கின மனசாட்சியை கூர்மையாக்கி தம்முடைய இரத்தத்தாலும், அன்பினாலும் நிரப்பினார். சேரக் கூடாத ஒளியிலும், மகா பரிசுத்தத்திலும் எப்பொழுதும் மனிதரால் எண்ணிக்கூட பார்க்க முடியாத மகா பெரிய சிங்காசனத்தில் வீற்றிருக்கிற சர்வ வல்லமையுள்ள தேவனை தம் குமாரன் மூலமாக நாம் அனுகத்தக்கதான வழியை உருவாக்கினார். (யூதா 24,25; 1தெச. 5:23,24)

இயேசு உலகிற்கு வரும் முன் தேவனை ஒருக்காலும் ஒருவரும் காண முடியாது. அப்படி தேவ பிரசன்னத்தை உணர வேண்டும் என்றால் பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்த ஆசாரியர்கள் வருடம் முழுவதும் தங்களை பரிசுத்தமாக்கி ஒருமுறை மாத்திரம், தங்கள் மகா பரிசுத்த ஸ்தலத்தில் கேரூபீன்கள் மத்தியில் இருக்கும் மகிமையை காண முடியும். சாதாரண மனிதர்கள் மற்றும் எவ்வளவு பெரிய கர்த்தருடைய ஊழியர்கள் என்றாலும் பிரதான ஆசாரியர் இருக்கும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் போகவே முடியாது. (எலியா, ஏனோக்கு, மோசே போன்ற ஒருசிலரை தவிர)

இயேசு சிலுவையில் தொங்கி மரித்த பொழுது தேவனுக்கும் நமக்கும் இடையில் இருந்த பகை ஒழிந்து சமாதானம் ஏற்பட்டது. எபிரெயர் 4:15,16-ன்படி நாம் எப்பொழுது வேண்டு மென்றாலும் இயேசுகிறிஸ்துவின் உன்னத நாமத்தின் வழியாக பிதாவின் சமூகத்தை அடைய முடியும். இது எத்தனை பெரிய பாக்கியம். அதுமாத்திர மல்ல, இயேசு பரலோகத்திற்கு சென்று பிதாவினிடத்தில் நமக்காக பரிந்து பேசுகிறபடி நமக்காக தேற்றரவாளனை உதவியாக, பாது காவலராக பரிசுத்த ஆவியை தந்து நம்மை நீதியின் பாதையில் நடத்துகிறார்.

எத்தனை சோதனைகள் வந்தாலும், யோசேப்பு, தானியேல், இயேசுவை போல நமக்கு வெற்றியை தருகின்றார். நம்மால் ஜெயிக்க முடியாத சத்துருவானவன் கொண்டு வருகிற சாபங்கள், பாவ சோதனைகள், பில்லிசூன்யங்கள், மந்திரங்கள், தந்திரங்கள், கொடிய வியாதிகள், எதிர்பாராத பின்மாற்றங்களிலிருந்து நம்மை விடுவித்து நாம் சந்தோஷமாக கர்த்தரை ஆராதிக்கும்படி செய்கிறார்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து "என்னை கண்டவன், பிதாவை கண்டான்" என்று கூறுகிறார். நான் சிறு வயதில் 17 ஆண்டுகள் இயேசுவை காண வேண்டும் என்று அழுதேன். உலகப் பிரகாரமாக எந்த ஒரு காரணத்திற்காகவும் நான் அழுதது கிடையாது. சில நேரங்களில் என் தாயை நினைத்து அழுதது உண்டு. உண்மை அன்பு எங்கு கிடைக்கும் என்றும், நான் அனாதை சிறுவனாக இருந்தபடியால் படிக்க முடிய வில்லையே என்றும் அழுதுள்ளேன். எல்லா வற்றையும் விட இயேசுவை காண வேண்டும் என்று அழுதது தான் அதிகம். விவரம் தெரியாமல் தற்கொலை பாவம் என்று தெரியாமல் என் ஜீவனை விட்ட நாட்கள் உண்டு. என்னுடைய 29ஆம் வயதில் இயேசு என் வீட்டிற்கு வந்தார். அவரிடத்தில் பிதாவின் மகிமையை கண்டேன். பரலோகத்தையும் கண்டேன்! அது என் வாழ்க் கையில் மிகப் பெரிய திருப்பமாக அமைந்தது. இதைத் தான் கர்த்தர் உங்களுக்கும் தருவார். (யோவான் 14:5,9; 10:30) இந்த அருமையான சிலாக்கியத்தை உங்களுக்கும் கொடுத்து உங்களை பரிசுத்தமாக காத்துக் கொள்வார்.

## நம்முடைய பயங்களையும், திகிலையும் நீக்கி கர்த்தர் சகாயம் செய்வார் (சங். 124:8; ஏசா. 41:10)

எல்லாவித தீங்கிற்கும், நெருக்கத்திற்கும் தேவன் நம்மை விலக்கி நம் சத்துருக்களை அழித்து நமக்கு சகாயம் செய்வார். கர்த்தருடைய அன்பு நம்மில் பெருகும்படி செய்வார். (யூதாவின்) அவன் கை பலக்கக்கடவது, அவனுடைய சத்துருக் களுக்கு அவனை நீங்கலாக்கி விடுவிக்கிற சகாயராயிருப்பீராக (உபா.33:7) இதற்கு நாம்

செய்ய வேண்டியது எல்லாம் உத்தம இருதயத்தோடு எல்லா காரியத்திற்கும் அவருடைய உதவியை தேட வேண்டும்.

ஜெபத்தோடும், விசுவாசத்தோடும் அவரை தேட வேண்டும். (சங். 10:4; 46:5; எபி.13:6) மனுஷனை நம்புவதை பார்க்கிலும் தேவனையும், அவர் நமக்குத் தந்த அபிஷேகத்தையும், பரிசுத்த ஆவியானவரின் ஆலோசனையையும், வேத வாக்கியங்களையும் அதிகமாக நம்ப வேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு அவருடைய சகாயம் எப்பொழுதும் இருக்கும். என் வயது இப்பொழுது 71 ஆக போகிறது. 12 வயது முதல் பலவிதமான ஆபத்துக்கள், காரணமில்லாத சத்துருக்களின் கொலை வெறிகள். ஏளனமான வார்த்தைகள், பயங்கரமான மரண வியாதிகள், எதிர்ப்புகள், கொலை மிரட்டல்களில் இருந்து எல்லாம் கர்த்தர் என்னை விடுவித்தார். என்னை விரோதித்த வர்களை அழித்து போட்டார். ஒருசிலரோடு பேசி மன்னிப்பு கேட்க வைத்தார். அவர்கள் நினைத்ததை பார்க்கிலும் நான் இளநிலை, முதுநிலை படிப்புகளை குறுகிய காலத்தில் படிக்கும்படி கர்த்தர் கிருபை பாராட்டினார். என்னை ஏளனம் செய்த படித்த மேதைகளை பார்க்கிலும் ஞானத்தை தந்தார், அபிஷேகத்தை தந்தார். ஆச்சரியமான காரியங்களை செய்தார்.

ஆம். கர்த்தருடைய சகாயம் உங்களுக்கு இருக்கும்பொழுது உங்களுக்கு ஒருவரும் தீங்கு செய்ய முடியாது. உலகில் ஒருவரும் இல்லாத அனாதையாக நீங்கள் இருக்கலாம். ஆனால் தேவன் உங்கள் பக்கத்தில் இருக்கும்பொழுது தாவீது, யோசேப்பு, தானியேலை போல உயர்த்தப்படுவீர்கள்.

சகாயம் செய்யும் தேவன் உங்களையும் உங்கள் குடும்பத்தின் பிள்ளைகளையும், உற்றார், உறவினர் அனைவரையும் உங்கள் ஜெபத்தின் மூலம் நீங்கள் காண்பிக்கும் அன்பின் மூலம் அவர்கள் செய்யும் தீமைக்கு நீங்கள் நன்மை செய்வதால் தம் அன்பை அறியவும், இரட்சிக்கப்படவும் செய்வார். (ஆதியாகமம் 50:20; ரோமர் 12:20,21

எங்கு திரும்பினாலும் எனக்கு உதவியே கிடைக்காது என்று நினைத்தாலும் தகுந்த நேரத்தில் கர்த்தர் உங்களுக்கு சகாயராக தோன்றுவார். (சங்கீதம் 22:11,18,19) எசேக்கியா ராஜா எல்லா பக்கத்திலும் நெருக்கப்பட்டான். ஆயிரக்கணக்கான குதிரை வீரர்கள் அவனை சுற்றி வளைத்தது. ஆனால் எசேக்கியா வினிடத்திலோ 100 குதிரை வீரர்கள் கூட இல்லை. மிகுந்த இக்கட்டிலும் அவர் வீண் மாயைகளை பின்பற்றாமல் ஆபிரகாமின் தேவனை முழு இருதயத்தோடு நம்பினான். (2 இராஜாக்கள் 18:5) யோசபாத் என்னும் அரசன் தன் மக்களிடத்தில் சொன்னது போல கர்த்தருடைய சகாயத்தை தேட அவர் ஆலயத்திற்கு சென்று மன்றாடினான்.

ஆலயம் என்று சொல்லும்பொழுது கைகளினால் கட்டப்பட்ட ஆலயம் மாத்திரம் அல்ல. கிறிஸ்துவே நம்முடைய ஆலயமாக இருக்கிறார். (யோவான் 2:21). உங்கள் வீட்டில் ஒரு சிறு அறையாக இருக்கலாம் அல்லது நீங்கள் வேலை செய்யும் இடத்தில் ஒருவருக்கும் தெரியாத ஒரு சிறு இடமாக இருக்கலாம். இடங்களை பற்றி பிரச்சனை இல்லை. தேவனுடைய பிரசன்னம் தான் முக்கியம்.

இயேசுவை தேவன் சிலுவையில் மரிக்க ஒப்புக்கொடுக்கும்பொழுது அவருக்கு உதவி செய்ய யாருமே இல்லை. அவரை தூஷித்தார்கள், துப்பினார்கள், கொடூரமாக அடித்தார்கள். ஆணிகளால் அறைந்தார்கள், சரீரத்தில் ஒரு இடம் கூட பாக்கி இல்லாமல் எல்லா சதைகளையும் கிழித்து கொன்று போட்டார்கள். இனி இவர் வரவே மாட்டார். இவரோடுகூட, இவர் செய்த அற்புதங்களும், இவருடைய புதிய உடன்படிக்கைகளும், வாக்குத்தத்தங்கள் எல்லாம் மண்ணுக்கு மண்ணாய் போய்விடும், புழு தின்றுவிடும் என்று நினைத்தார்கள். ஆனால் யோசித்துப் பார்த்தார்களா? சங்.16:10–ன்படி தேவன் அவரோடுகூட இருந்தார். எனவே தான் கடைசியாக "பிதாவே உம்முடைய கரங்களில் என் ஆவியை ஒப்புக் கொடுக்கிறேன்" என்று மகா சத்தமிட்டு கூறுகின்றார். (லூக்கா 23:46) அவர் சொன்ன அடுத்த விநாடி பரலோக பிதா தம்முடைய வல்லமையை வெளிப்படுத்தினார்.

பூமி அதிர்ச்சி எங்கும் காணப்பட்டன, கன்மலைகள் பிளந்தது. கல்லறைகள் திறந்தன, சூரியன் அந்தகாரப்பட்டது, செத்துப்போன பரிசுத்தவான்கள் எழுந்தனர், வானம் இருண்டன, மேகங்கள் கூடின. பெரும் மழையின் இரைச்சல்கள் காணப்பட்டன. எல்லா வற்றுக்கும் மேலாக பிரதான ஆசாரியனை தவிர எவரும் நுழைய முடியாத மகா பரிசுத்த ஸ்தலத்தை மூடிய 6 முதல் 9 அங்குலம் கொண்ட, 60 முதல் 90 அடி உயரமுள்ள தேவாலயத்தின் திரைச்சீலை நடுவில் இரண்டாகக் கிழிந்தது. தேவாலயத்தின் சுவர்கள் அதிர்ந்தன, மக்கள் பயந்து ஓடினார்கள். ஆனால் பல ஆவிகளை வணங்கிய நூற்றுக்கு அதிபதி சம்பவித்தவைகளை கண்டு "மெய்யாகவே அவர் நீதிமான், இவர் தேவனுடைய குமாரன்" என்று அறிக்கையிட்டான். அவரை ஈட்டியால் குத்தினவர்களில் ஒருசிலர் பின்னாளில் இயேசுவின் சீஷனாக மாறினார்கள்.

ஆம் பிரியமானவர்களே! நாம் உயிரோடு இருந்தாலும், மரித்தாலும் சகாயம் செய்யும் சர்வ வல்லமையுள்ள பிதா நம் அருகில் இருக்கிறார். எனவே கலங்க வேண்டாம்! நீங்கள் ஜெபிக்கும் பொழுது, துதிக்கும்பொழுது, உபவாசிக்கும் பொழுது வேதாகமத்தை ஆராயும்பொழுது அவரை பற்றி எடுத்து கூறும்பொழுது கபடற்ற இருதயத்தோடு இருங்கள். உங்கள் பகைவர்களை மன்னியுங்கள். பழிக்கு பழி, தீமைக்கு தீமை செய்யாதீர்கள். அப்பொழுது தேவன் உங்களோடு இருப்பார். உங்களிடத்தில் காணப்படும் தெய்வீக அன்பும், அவருடைய சகாயமும் பலத்த அதிசயங்களையும், அற்புதங்களையும் கொண்டு வரும். இந்த ஆண்டு முழுவதும் கர்த்தர் இவ்விதமாக உங்களை வழி நடத்துவார்.

- கர்த்தர் என் பெலனும் என் கேடகமுமாயிருக்கிறார்; என் இருதயம் அவரை நம்பியிருந்தது; நான் சகாயம் பெற்றேன்; ஆகையால் என் இருதயம் களிகூருகிறது; என் பாட்டினால் அவரைத் துதிப்பேன் – சங்கீதம் 28 : 7
- இதற்காகச் சகாயங்கிடைக்குங் காலத்தில் பக்தியுள்ளவனெவனும் உம்மை நோக்கி விண்ணப்பஞ் செய்வான்; அப்பொழுது மிகுந்த ஜலப்பிரவாகம் வந்தாலும் அது அவனை அணுகாது. – சங்கீதம் 32: 6








Telugu Whats App No: 91770 87860

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

2 கொரிந்தியர் 9:7

## அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதற்கான எளிய வழிகள்

மணியார்டர் (MO) / காசோலை (cheque) / வரைவோலை (DD)
Online Donation (Website)
Bank Account / QR Code
UPI / Google pay / Paytm / Phonepe

இந்த QR code–ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது 95004 87061 என்ற எண் மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் மூலமாகவும் காணிக்கை அனுப்பலாம்.

### வங்கிக் கணக்குகளின் விபரம்




| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| A/c no. 10848469699 | A/c no. 10848559426 | A/c no. 10848474869 |

IFS Code: SBIN 0000930
State Bank of India, Cantonment, Trichy Main Branch.

காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள். நேரில் அல்லது கூட்டங்களில் எங்களை சந்தித்து காணிக்கையை தரவிரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்புக்கொள்ளுங்கள். (10.00 AM - 6.00 PM)

**Cell no. 94888 45627, 80987 42638**

உங்களுடைய உற்சாகமான காணிக்கைகள், தசமபாக காணிக்கைகள், பொருத்தனை காணிக்கை மற்றும் ஸ்தோத்திர காணிக்கையை அனுப்பி அன்பரின் ஊழியத்தை தாங்குங்கள்.

கர்த்தர் நிச்சயமாக இதற்குரிய பலனை பல ஆயிரம் மடங்காக தந்து உங்களை ஆசீர்வதிப்பார்!

அன்பரின் ஊழியத்தின் முகவரி : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி – 620018.

# அறிக்கை

- **கர்த்தாவே, உமது செய்கைகளால் என்னை மகிழ்ச்சியாக்கினீர், உமது கரத்தின் கிரியைகளினிமித்தம் ஆனந்தசத்தமிடுவேன். - சங்கீதம் 92:4**
- **கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார்; இதினிமித்தம் நாம் மகிழ்ந்திருக்கிறோம். - சங்கீதம் 126:3**

## கர்த்தரின் பெரிதான கிருபையினால் மேற்கொள்ளப்படுகிற அன்பரின் ஊழியப் பணிகளைக் குறித்த விபரங்கள்

### 1. அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டங்கள் மற்றும் உங்கள் விடுதலையின் நாள் கூட்டங்கள் வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது:

- 2023-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை தமிழ்நாடு, தெலுங்கானா, ஆந்திரா மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களில் 63 குடும்ப ஆசீர்வாதக் கூட்டங்கள் நடைபெற்றன.
- குடும்பங்களுக்கான ஆலோசனை மற்றும் தனி ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இதன் மூலம் சுமார் 8 முதல் 10 ஆயிரம் மக்கள் கிறிஸ்துவின் அன்பை தெரிந்துக்கொண்டனர்.
- ஒரு சில இடங்களில் திருச்சபைகள் மூலம் (கான்பூர், ஜாஹீராபாத், உடுமலைப்பேட்டை) நற்செய்திப் பெருவிழா கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டது. அனைத்து கூட்டங்களிலும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேக வல்லமை மழையாக பொழிந்து அற்புதங்கள் நடைபெற்றது.
  1. ஆட்டிஷம் குணமானது
  2. மரணபடுக்கையிலிருந்தவர்கள் புது ஜீவன் பெற்றனர்
  3. செயலிழந்த கை, கால்கள் இயேசுவின் நாமத்தில் செயல்பட்டன
  4. செவிடர் கேட்கும் திறன் பெற்றனர்
  5. கண் பார்வையற்றோர் பார்வையடைந்தனர்
  6. பிசாசின் கட்டுகளிலிருந்து விடுதலையாகினர்
  7. தற்கொலையே முடிவு என வந்தவர்கள் சத்தியத்தைக் கேட்டு மனம் மாறினர்.

### 2. தொலைக்காட்சி ஊழியங்கள் :

அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சிகள் தமிழ், மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளில் ஒளிப்பரப்பாகிறது. இதன் மூலம் ஏராளமான ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் கொண்டு செல்ல கர்த்தர் உதவி செய்தார்.

### 3. தொலைப்பேசி ஊழியங்கள் :

தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளில் தொலைபேசி வாயிலாக ஜெபித்து பலருடைய வாழ்வில் கர்த்தர் அதிசயங்களை செய்து அவர்கள் துக்கத்தை சந்தோஷமாக மாற்றியுள்ளார்.

**4. பத்திரிக்கை ஊழியம் :**

பத்திரிக்கை ஊழியம் தமிழ், தெலுங்கு மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்பட்டது. பல ஆயிரக்கணக்கான மக்கள் இதன் மூலம் பயனடைந்தனர். பத்திரிக்கையில் வருகிற ஆவிக்குரிய செய்திகள் வாயிலாக மக்களுடைய விசுவாசம் கிறிஸ்துவுக்குள் நன்கு பெலப்படுகிறது.

**5. கடித ஊழியம் :**

தமிழ், ஆங்கிலம், தெலுங்கு ஆகிய மொழிகளில் வரும் கடிதங்களுக்காக ஜெபித்து, வசன ஆதாரங்களுடன் பதில் எழுதி அனுப்பப்படுகிறது. இதனால் அநேக மக்கள் தேற்றப்பட்டனர். மின்னஞ்சல், வாட்ஸ்அப் வழியாக தொடர்புக்கொண்ட மக்களுக்காகவும் பாரத்துடன் ஜெபித்து ஆறுதலான பதில்கள் மக்களுக்கு தரப்படுகிறது.

**6. சமூக வலைதள ஊழியங்கள் :**

**அனுதின அற்புதம்**

**Ministry of Jesus youtube** வாயிலாக தினந்தோறும் வருகிற ஒவ்வொரு “அனுதின அற்புதம்” நிகழ்ச்சியையும் 200 பேர் முதல் 2000 பேர் வரை பார்த்து பயன் அடைகிறார்கள்.

**நேரலை நிகழ்ச்சிகள்**

**Ministry of Jesus youtube** வாயிலாக **Joy Unlimited Live Program, Miraculous Worship** போன்ற நேரலை நிகழ்ச்சிகள் தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் நடைபெற்றன. டிசம்பர் மாதம் கிறிஸ்துமஸ் சிறப்பு நிகழ்ச்சிகள் தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் வெளிவந்தன.

**Ministry of Jesus youtube** வாயிலாக வெளியான பாடல்கள் விபரம்

1. வருஷங்கள் தோறும்
2. உள்ளமெல்லாம் உருகுதய்யா
3. சாலேமின் ராசா
4. ஒக்கமாட்டாசாலுபிரபுவா (தெலுங்கு)

**7. ஜெப ஸ்தல பராமரிப்பு மற்றும் புதுப்பித்து சீரமைக்கும் பணிகள்**

பங்காளர்கள் அநேகருடைய உதவினால், ஜெபத்தினால் ஜெப ஸ்தலத்தின் வடக்குபுறத்தின் பணிகள் மட்டும் முடிந்துள்ளது. இதற்காக உதவிய, தாங்கிய நல் உள்ளங்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

## S J Saves Trust-ன் நற்பணிகள்

சேலம் மாவட்டம் மற்றும் அதனை சார்ந்த மாவட்டத்தில் உள்ள ட்யூசன் மையங்களில் சுமார் 350 மாணவர்கள் படித்துவருகிறார்கள். இவர்களுக்கு நல்ல ஆசிரியர்களைக் கொண்டு மாலை நேர வகுப்புகள் எடுக்கப்படுகிறது. இரவுநேரத்தில் சிற்றுண்டியும், தின்பண்டங்களும் வழங்கப்பட்டது.

- **ஏழை மாணவ மாணவியர்களுக்கு மாலை நேர ட்யூஷன் எடுக்கப்பட்டது.**
- **சேலம் மாவட்டம் மேட்டுபட்டி, அயோத்தியா பட்டணம், கருமாபுரம், அக்ரஹாரம் பகுதிகளில் விடுமுறை நல்லொழுக்கப் பயிற்சி நடைபெற்றது. இதில் 300 மாணவர்கள் கலந்துகொண்டார்கள். இதில் கம்ப்யூட்டர், கிளாஸ் பெயிண்டிங், ஹேண்ட் பேக், பேப்பர் கப், பேப்பர் பிளேட் தயாரிக்கும் முறை, கூடை பின்னுதல்**

போன்றவை கற்றுக்கொடுக்கப்பட்டது. இதை அங்கிருந்த கிராமப் பெரியோர்கள் பாராட்டி நன்றி தெரிவித்தனர். சேலம் மாவட்டம் நாட்டா மங்கலத்தில் ஹெப்ரோன் மையத்தில் இரண்டு நாள் கிராமப்புற மாணவர்களுக்கு ஆங்கில மொழித் திறன் நடத்தப்பட்டது. 372 மாணவர்கள் பயனடைந்தனர். செஸ் மற்றும் பலவித விளையாட்டு பயிற்சிகளும் சொல்லிக் கொடுக்கப்பட்டது.

- மாணவர்களுக்கு பள்ளிக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் அத்தியாவசிய தேவையான டிபன் பாக்ஸ், ஸ்கூல் பேக் போன்றவை வழங்கினோம். அதுமட்டுமல்லாது, புரோட்டீன் பவுடர், சத்துடானிக் மற்றும் மருந்துகளை வழங்கினோம்.
- கல்லூரி கட்டணம் செலுத்த முடியாத ஏழை மாணவிகளுக்கு உதவிகள் செய்யப்பட்டது.
- படிப்பில் சிறந்து விளங்கிய 24 மாணவ, மாணவிகளுக்கு கைக்கடிகாரம் பரிசாக வழங்கப்பட்டது.
- விளையாட்டு போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு உதவிகள் செய்யப்பட்டது. பல மாணவிகள் பதக்கம் பெற்றனர்.

## S J Saves Trust-ன் இதரபணிகள்

- கணவரை இழந்த பெண்கள் மற்றும கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கு (160 பேர்) தையல் பயிற்சி, எம்பிராய்டரி பயிற்சி, கூடை பின்னுதல் பயிற்சி வழங்கி அவர்கள் வாழ்வாதாரம் உயர முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 8 பெண்களுக்கு தையல் இயந்திரம் வழங்கினோம்.
- நாமக்கல் மாவட்டத்தில் மருத்துவமுகாம் நடத்தப்பட்டது. இதில் 400 மக்கள் பயனடைந்தனர். நோயினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலவசமாக மருந்துகள் வழங்கினோம்.
- வருடத்தின் கடைசியில் மழை காலங்களில் ஏழை சிறுவர், சிறுமிகள் 300 பேருக்கு குடை, பெட்ஷீட், பாய், மருந்துகள் வழங்கப்பட்டது. அநேக பெரியவர் களுக்கு உணவும், ஆடைகளும் தரப்பட்டது.

## S J Saves Trust-ன் மருத்துவமனை பணிகள்

இம்மருத்துவமனை மூலம் இந்த ஆண்டு 12 ஆயிரத்திற்கும் அதிகமான ஏழை நோயாளிகளுக்கு குறைந்த செலவில் நல்ல சிகிச்சை அளிக்கப்பட்டது. இவை அனைத்தும் ஜாதி, மத மற்றும் எந்த விதமான ஏற்றத் தாழ்வின்றி எளிய மக்களுக்காக செய்யப்பட்ட அறப்பணியாகும்.

*கர்த்தரை ஸ்தோத்தரிப்போம்*

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது அன்பின் நிமித்தம் அவர் நமக்கு தந்த அன்பரின் ஊழியம் மற்றும் **S J Saves Trust** மூலம் கடந்த ஆண்டு செய்த பெரிய காரியங்களுக்காக தேவனை துதிப்போம். ஸ்தோத்தரிப்போம்.

# ஊழியத்தின் தூண்கள்

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளே!

அன்பரின் ஊழியத்தின் மூலம் பலவிதங்களில் சுவிசேஷப்பணிகள் செய்யப்பட்டு வருகிறது. இத்தனை ஊழியங்களையும் எப்படி செய்ய முடியும்? என்று உங்களில் அநேகர் கேள்விகளை கேட்கிறீர்கள். இதற்கான காரணங்களை நான் கீழே தருகின்றேன்.

முதலாவது கிறிஸ்து இயேசுவோடு நமக்கு தனிப்பட்ட தொடர்பு இருக்க வேண்டும். கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட ஒவ்வொரு ஊழியர்களும் அநேக மணி நேரங்கள் தேவனோடு பேச வேண்டும். இதை நாங்கள் சிறு வயதிலிருந்து செய்கிறோம்.

இரண்டாவதாக, இந்த மாபெரும் ஊழியத்தில் அநேக வருடங்களாக அதிக அன்புள்ளம் கொண்ட தேவ பிள்ளைகள் எங்களோடு இணைந்து தாங்கி வருகிறார்கள். அதில் அநேகருக்கு இன்று வயதாகிவிட்டது. இருப்பினும் தொடர்ந்து கடந்த 30 வருடமாக இந்த ஊழியத்தை தாங்குகிறார்கள். ஆசிரியர்கள், சில அரசு ஊழியர்கள் மற்றும் தொழில் செய்கிறவர்கள் இந்த ஊழியத்தை நேசித்து தாங்குகிறார்கள்.

குறிப்பாக சமீபத்தில் பீட்டர் என்னும் சகோதரர் என்னை சந்திக்க வந்தார். அவர் ஒரு சாதாரண மளிகை கடையில் பல வருடங்களாக வேலை செய்கிறார். அவருக்கு சாப்பாடு போக மாத சம்பளம் 5000 ரூபாய். அதிலிருந்து 4000 ரூபாயை ஊழியத்திற்கு கொடுத்து விட்டு,வெறும் 1000 ரூபாயில் தனது அத்தியாவசிய செலவுகளை செய்து கொள்கிறார். இப்படி 15 வருடமாக தொடர்ந்து அனுப்பிக் கொண்டிருக்கிறார். அவருடைய சகோதரரும் ஊழியம் செய்கிறார். இவர்கள் இருவரும் தங்களுடைய மிகக்குறைந்த வருமானத்தில் பெரும் பகுதி ஊழியத்திற்கு அனுப்பிவிடுவார்கள்.

இன்னொரு அருமையான சகோதரி 25 ஆண்டுகளுக்கு முன்பு நமது கூட்டங்களில் கலந்துகொண்டார். வீட்டின் வருமானத்திற்கு என்ன செய்வது என தெரியாமல் திகைத்து நின்றார், சுமக்க முடியாத கடன் பாரங்கள் இருந்தன. “மகளே! நீ கலங்காதே, கர்த்தர் உனக்கு ஒரு சிறு வியாபாரத்தை கொடுப்பார், அந்த வியாபாரத்திற்கு அடிப்படையாக நான் கொஞ்சம் பணம் தருகிறேன், இதை வைத்துக்கொள்” என்று கூறி எனது வாழ்க்கையில் எப்படி நான் உயர்ந்தேன் என்ற காரணத்தையும், யாக்கோபு, ஆபிரகாமை போல கையில் வரும் எல்லாவற்றிலும் தசமபாகம் எடுத்து வைக்கும்படியும் கூறி ஜெபித்து அனுப்பினேன்.

அந்த சகோதரியும் பூ கட்டி விற்கும் வியாபாரத்தை ஆரம்பித்தார்கள். அதில் கிடைக்கும் வருமானத்திலிருந்து ஊழியத்திற்கு 25 ஆண்டுகளாக காணிக்கையை கொடுத்து வருகின்றார்கள்.சமீபத்தில் அந்த தாய் என்னை நேரில் சந்தித்து இன்று நான் நல்ல நிலையில் உயர்ந்திருக்கிறேன் என சொல்லி கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள். ஆம், இப்படித்தான் பூ விற்கின்ற தாயும் இந்த ஊழியத்தை தாங்குகிறார்கள். இப்படி நான் சொல்லிக்கொண்டே போகலாம். அநேக ஏழை மக்கள், ஓய்வு பெற்ற மக்கள் நாம் செய்யும் தேவ தொண்டை அதிகமாய் நேசித்து தாங்கி வருகின்றனர். இவர்கள்தான் ஊழியத்தின் தூண்கள். இவர்களைப் போல நீங்களும் மாறுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

இன்னொரு அன்பு சகோதரர் மிகக்குறைந்த சம்பளத்தில் வேலை செய்கிறார். ஒவ்வொரு நாளும் தன்னால் இயன்ற பொருட்களை (ரப்பர், பென்சில், ஸ்கேல், பேனா) வாங்கி ஏழை பிள்ளைகளுக்கு கொடுக்கும்படி கூறுவார். இப்படிதான் சிறு துளிகள் சேர்ந்து இந்த பெரிய ஊழியம் நடத்தப்படுகிறது.

## ஜெபமே ஜெயம்!

இயேசுகிறிஸ்து உலகத்தில் வாழும்பொழுது எவ்வளவு ஊழியம் செய்தாலும் அடிக்கடி தனியே போய் பிதாவை நோக்கி ஜெபம் செய்து அவர் சித்தத்தை அறிந்தார். தேவனால் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு ஊழியருக்கும் ஒவ்வொருவிதமான அழைப்பு இருக்கும். அந்த அழைப்பு மிகவும் பெரியது. அதற்கு தேவனுடைய கிருபையும், அவர் மீது அளவற்ற அன்பும் தேவை. நாம் அவரை அதிகமாக நேசிக்கும் பொழுது அவரோடு அதிக நேரம் பேசுகிறோம். பொதுவாகவே எங்கள் வாழ்வில் இரவில் அதிக நேரம் தேவனோடு பேசுவோம்.

இந்த ஊழியங்களுக்காக அநேகர் தங்களுடைய தனி ஜெபத்திலும், குடும்ப ஜெபத்திலும் மறவாது ஜெபித்து வருகின்றனர். ஊழியங்களுக்காக மாத்திரமல்ல, எங்களது சுகத்திற்காகவும்,பயணங்கள் பாதுகாப்பாய் அமையவும் ஜெபிக்கின்றார்கள். மூன்று வயது பெண் பிள்ளை முதற்கொண்டு 95 வயது தாயார் வரைக்கும் விடாமல் எங்களுக்காக ஜெபித்து வருகின்றனர். அவர்களுடைய ஜெபமே எங்களுக்கு ஒரு பெரிய ஆதாரமாக இருக்கின்றது. பல சமயங்களில் அவர்களுடைய ஜெப வல்லமையை நான் தரிசனங்களில் கண்டு இருக்கிறேன்.

அளவற்ற கர்த்தருடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகின்றபடியால் சாதுர்ய ஞானமில்லாமல் சுவிசேஷத்தை அறிவித்து, தேவ பிள்ளைகளுடைய விசுவாசத்தை அதிகரிக்க செய்யும் கூட்டங்களை வைத்து அவர்கள் தரும் ஜெப விண்ணப்பங்களுக் காகவும் கண்ணீரோடு ஜெபிக்கிறோம்.

பரிசுத்த ஆவியானவர் தமது வல்லமையால் பலத்த அடையாளங்களை செய்து தம்முடைய அளவற்ற கிருபையை காண்பிக்கின்றார். எவ்வளவு கஷ்டங்கள், பாடுகள் வந்தாலும் அவருடைய இனிய பிரசன்னம் எங்களை உற்சாகப்படுத்துகிறது.

எனவே அன்பு பிள்ளைகளே! கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மிக துரிதமாய் வரப்போகிறது. மிகுந்த உபத்திரவத்தின் காலத்தில் உலகம் ஒவ்வொரு ஆண்டும் கடக்கிறது. கர்த்தர் இயேசு சொன்னபடி விழித்திருந்து ஜெபிப்போம். இன்னும் அவருடைய ஊழியத்தை பெருக்குவோம். நீங்கள் என்ன செய்தாலும் இயேசுவோடு பேசிக் கொண்டே இருங்கள். அவர் உங்களுக்காக பெரிய காரியங்களை செய்வார்.

நீதி.11:30; தானியேல் 12:3; மத்.10:40-42; சங்கீதம் 112; மத்தேயு 25:35-40; 1 கொரிந்தியர் 15:57,58

இந்த வசனங்களை நன்கு ஆழ்ந்து படியுங்கள். தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள், தாங்குங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

### திருச்சியில்
### அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

ஜனவரி 27 சனிக்கிழமை

காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை

அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்,
10-வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி - 18

தேவ செய்தியாளர்கள்

**Dr. ஆனந்த ஸ்திரா மற்றும் குடும்பத்தினர்**

கூட்டமுடிவில் தனி ஜெபம் ஏறெடுக்கப்படும்

தொடர்புக்கு : 99445 36343, 94888 45627



Trichy

# WE ARE HIRING

## JOIN OUR TEAM

**ACCOUNTANT**

(B.com. / M.com. Graduates)
Skills Required: Tally ERP 9

**DATA ENTRY OPERATORS**

(Any UG / PG Candidates)
Skills Required: Good In Computing Skills

**CORRESPONDENCE**

(Any UG / PG Candidates)
Skills Required: Typing & Computing Skills
(Tamil, English, Telugu)

**SOCIAL MEDIA EXECUTIVE**

(Any UG / PG Candidates)
Skills Required: Good in social Media
Platforms, Good in English & Tamil

**GRAPHIC DESIGNERS**

(Any UG / PG Candidates)
Skills Required: able to work in
Adobe photoshop & Illustrator

**DRIVERS-*URGENT NEED*) COOK, HOUSE KEEPERS**

**VIDEO EDITORS**

(Any UG / PG Candidates)
Skills Required: able to work in
Adobe Premiere Pro & After Effects

**CAMERAMAN**

with adequate Experience

***Christians Preferred***
***Apt Remuneration will be paid***

Apply to: ministryofjesushr@gmail.com

# 2024 ஜனவரி மாதத்திற்குரிய தினசரி வாக்குத்தத்த வசனங்கள்

ஜனவரி 1
… உனக்குச் சகாயஞ்செய்வேன் என்று மெய்யாகவே சொல்லுகிறேன். (எரே. 15:11)

ஜனவரி 2
நம்முடைய சகாயம் வானத்தையும், பூமியையும் உண்டாக்கின கர்த்தருடைய நாமத்தில் உள்ளது. (சங். 124:8)

ஜனவரி 3
அவனுடைய சத்துருக்களுக்கு அவனை நீங்கலாக்கி விடுவிக்கிற சகாயராயிருப்பீராக (உபா. 33:7)

ஜனவரி 4
… திக்கற்ற பிள்ளைகளுக்குச் சகாயர் நீரே. (சங். 10:14)

ஜனவரி 5
அவர் தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார். (எபி. 2:18)

ஜனவரி 6
என் இருதயம் அவரை நம்பியிருந்தது; நான் சகாயம் பெற்றேன். (சங். 28:7)

ஜனவரி 7
… என்னிடத்தில் உனக்குச் சகாயம் உண்டு (ஓசியா 13:9)

ஜனவரி 8
… நீர் எனக்குச் சகாயம் பண்ணும் (சங். 119:86)

ஜனவரி 9
யெஷுரனுடைய தேவனைப் போல் ஒருவரும் இல்லை; அவர் உனக்குச் சகாயமாய் வானங்களின்மேலும் தமது மாட்சிமையோடு ஆகாய மண்டலங்களின் மேலும் ஏறி வருகிறார். (உபா. 33:26)

ஜனவரி 10
கர்த்தாவே, என்னை விடுவித்தருளும்; கர்த்தாவே, எனக்குச் சகாயம் பண்ணத் தீ விரியும். (சங். 40:13)

ஜனவரி 11
ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம் (எபி. 4:16)

ஜனவரி 12
எனக்கு ஒத்தாசைவரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். (சங். 121:1)

ஜனவரி 13
கர்த்தாவே, நீர் எனக்குச் செவி கொடுத்து என்மேல் இரக்கமாயிரும்; கர்த்தாவே, நீர் எனக்குச் சகாயராயிரும். (சங். 30:9)

ஜனவரி 14
யூதா ஜனங்கள் கர்த்தரிடத்திலே சகாயந்தேடக் கூடினார்கள். (2 நாளா. 20:4)

ஜனவரி 15

ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். (ரோமர் 8:26)

ஜனவரி 16

நான் விழும்படி நீ என்னைத் தள்ளினாய்; கர்த்தரோ எனக்கு உதவி செய்தார். (சங். 118:13)

ஜனவரி 17

... உனக்குச் சகாயஞ்செய்யும் கேடகமும் உனக்கு மகிமை பொருந்திய பட்டயமும் அவரே. (உபா. 33:29)

ஜனவரி 18

அவர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து உமக்கு ஒத்தாசையனுப்பி, சீயோனிலிருந்து உம்மை ஆதரிப்பாராக. (சங். 20:2)

ஜனவரி 19

இக்கட்டில் எங்களுக்கு உதவி செய்யும் மனுஷடைய உதவி விருதா. (சங். 60:11)

ஜனவரி 20

கேடகத்தையும் பரிசையையும் பிடித்து, எனக்கு ஒத்தாசையாக எழுந்து நில்லும். (சங். 35:2)

ஜனவரி 21

கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன். (எபி. 13:6)

ஜனவரி 22

என்னை விழுங்கப் பார்க்கிறவன் என்னை நிந்திக்கையில், அவர் பரலோகத்திலிருந்து ஒத்தாசை அனுப்பி, என்னை இரட்சிப்பார். (சங். 57:3)

ஜனவரி 23

ஆபிரகாமின் சந்ததிக்கு உதவியாகக் கைக்கொடுத்தார். (எபி. 2:16)

ஜனவரி 24

... நீரே எனக்குச் சகாயர். (சங். 27:9)

ஜனவரி 25

அவர்களுக்குக் கொஞ்சம் சகாயத்தைக் கட்டளையிடுவேன். (2 நாளா. 12:7)

ஜனவரி 26

கர்த்தர் அவர்களுக்கு உதவி செய்து, அவர்களை விடுவிப்பார். (சங். 37:40)

ஜனவரி 27

... நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன். (ஏசா. 41:10)

ஜனவரி 28

அதிகாலையிலே தேவன் அதற்குச் சகாயம் பண்ணுவார். (சங். 46:5)

ஜனவரி 29

உமது நியாயத்தீர்ப்புகள் எனக்கு உதவியாயிருப்பதாக. (சங். 119:175)

ஜனவரி 30

வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும். (சங். 121:2)

ஜனவரி 31

இதற்காகச் சகாயங்கிடைக்குங் காலத்தில் பக்தியுள்ளவனெவனும் உம்மை நோக்கி விண்ணப்பஞ்செய்வான்; அப்பொழுது மிகுந்த ஜலப்பிரவாகம் வந்தாலும் அது அவனை அணுகாது. (சங். 32:6)



# SJ SAVES TRUST

## நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை

- ... தரித்திரனுக்குத் தயை செய்கிறவனோ அவரைக் கனம் பண்ணுகிறான். நீதி. 14:31
- நீ விருந்து பண்ணும்போது ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் அழைப்பாயாக.
- அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய்; அவர்கள் உனக்குப் பதில் செய்ய மாட்டார்கள்; நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும் என்றார். லூக்கா 14:13,14

## S.J.Saves Trust மூலம் உதவி பெறுகிற பிள்ளைகளின் வாழ்க்கை சூழல்

நம்மிடம் உதவி பெறுகிற அநேக பிள்ளைகளுடைய வீடுகள் தென்னை ஓலை மற்றும் பேப்பர் அட்டைகளால் சுற்றி வேய்யப்பட்டவைகளாகும். மழை அதிகமாய் பெய்யும்பொழுது இவை தாக்குபிடிக்கமுடியாது, ஒழுகும். பிள்ளைகள் மழையில் நனைவதால் காய்ச்சலால் கஷ்டப்படுகிற சூழ்நிலை ஏற்படும். ஆகவே மழை காலங்களில் நம்முடைய ட்யூஷன் சென்டரில் தங்கி கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்துதருகிறோம். சமூக ஏற்றத்தாழ்வுகளை முன்னிட்டு அவர்களுக்கு உதவி செய்ய எவரும் முன்வர மாட்டார்கள். காலை உணவும் அவர்களுக்கு கொடுக்கப்படாது. அநேக பெற்றோர்கள் மதுபான பழக்கமுடையவர்கள். இதனால் இளம் வயதிலேயே பிள்ளைகளை அனாதைகளாக்கி விட்டு இறந்து விடுகிறார்கள். இந்த பிள்ளைகளுக்காக ஜெபியுங்கள்.

அத்துடன் கிறிஸ்துவுக்காக பாடுபட்டு மரிக்கிறவர்களின் பிள்ளைகளுக்கு ஒரு ஸ்தாபனம் தேவை. அதற்காகவும் ஜெபியுங்கள். இந்தப் பணிக்கு உதவி செய்ய விரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளுங்கள். 94889 32937

டிசம்பர் மாதம் சேலம் மாவட்டம் மேட்டுப்பட்டி கிராமத்தில் உள்ள டியூஷன் சென்டரில் படிக்கிற 150 ஏழை எளிய மாணவ மாணவியர்களை **Dr.** ஆனந்த ஸ்திரா அவர்கள் நேரில் சந்தித்தார்கள்.

★ மழைக்காலமாக இருப்பதால் 150 பிள்ளைகளுக்கும் Raincoat, பாய், போர்வை, சத்துமாவு மற்றும் சளி, இருமல் நீங்க cough syrup போன்றவை வழங்கப்பட்டது.

★ மாணவ மாணவியர்களின் படிப்பிற்கு தேவையான உபகரணங்கள் கொடுக்கப்பட்டது.

மாணவ, மாணவியர்கள் தங்கள் உடல் நலத்தை பேணிக்காக்க சுகாதார மற்றும் ஆரோக்கியம் தொடர்பான நல்அறிவுரைகளும், எதிர்காலத்தில் அவர்கள் சிறந்து விளங்க தேவையான நல்லொழுக்க நெறிகளும் கற்பிக்கப்பட்டது.

இறுதியில் பிள்ளைகளுக்கு சுவையான இனிப்பு, காரம், சிக்கன் பிரியாணி ஆகியவைகளையும் ஸ்தாபகர் ஐயா வழங்கினார்கள். பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் சாப்பிட்டு நன்றி கூறி சென்றார்கள்.

**ஏழை எளியவர்களுக்கு உதவிட கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 019150310875369 |
| Bank Name | : | Tamil Nadu Mercantile Bank |
| Branch | : | Palakarai, Trichy. |
| IFS Code | : | TMBL0000019 |
| A/c Type | : | Current |

**மருத்துவமனை பணிகளுக்கு கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 36477148891 |
| Bank Name | : | State Bank of India |
| Branch | : | Cantonment, Trichy Main Branch |
| IFS Code | : | SBIN 0000930 |
| A/c Type | : | Current |

**IT Act-ன்படி Sec. 80G Exemption உண்டு**

**அன்பரின் ஊழிய சமூக வலைத்தள விபரங்கள்**

facebook
Ministry of Jesus
My Deliverance Church
Ananda Stira
Margret Stira
Rev.Dr.A Joshua
Jane Joshua
Jonathanmosesstira

Youtube
Ministry of Jesus
My Deliverance Church
Dr Jane Joshua

Twitter
Ministry of Jesus
drjane15
My Deliverance Church
Jonathanstira

Instagram
ministryofjesus.in
dr.janejosh
mydeliverancechurch
Jonathanmosesstira

Threads
ministryofjesus.in
dr.janejosh
mydeliverancechurch
Jonathanmosesstira

info@mojindia.org

www.ministryofjesus.in
www.mydeliverance.church
www.sjsavestrust.in

**Tamil Whats App No: 95975 55066**

# சேலம் மாவட்டம் மேட்டுப்பட்டி டியூசன் சென்டரில் படிக்கிற 150 ஏழை மாணவ, மாணவியர்களுக்கு S.J. Saves Trust மூலம் மழைக்காலத்தில் செய்யப்பட்ட உதவிகள்



# S.J.S.T கிராமப்புற மருத்துவமனை பணிகள்

- எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும் காவலிலிருக்கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள்.
- அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்.

மத்.25:39,40

கர்த்தரின் பெரிதான கிருபையினால் நமது மருத்துவமனை நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. அதற்காக கர்த்தரை ஸ்தோத்தரிப்போம். மருத்துவமனையில் பணிசெய்கிற மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் அனைத்து பணியாளர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

நமது மருத்துவமனை பணிகளில் கர்த்தரின் கரம் தங்கியிருந்து வருகிற நோயாளிகளை சுகப்படுத்தும்படி ஜெபியுங்கள்.

மாதந்தோறும் இதன் தேவைகள் பல இலட்சங்களாக இருக்கிறது. பொறுத்தனையோடு இந்த பணியை தாங்குங்கள். தாராளமாய் கொடுங்கள். கர்த்தர் நிச்சயமாக இதற்குரிய பலனை பல மடங்காக உங்களுக்கு தருவார்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!








# உலக செய்திகள்

## பெண்களுக்கான

### விசேஷித்த தகவல்கள்

பல ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் பெண்கள் மாலை நேரங்களில் ஒன்று கூடி ஏதாவது ஒரு வீட்டுத் திண்ணையில் அமர்ந்து பேசிக்கொண்டிருப்பார்கள். குடும்பத்தில் ஏற்பட்ட சின்ன சின்ன காரியங்கள் மற்றும் நாள் முழுக்க செய்த வேலைகளால் ஏற்பட்ட மன இறுக்கமெல்லாம் இதில் தளர்ந்துவிடும். இப்போது திண்ணைகளும் இல்லை. பெண்கள் கூடுவதும் இல்லை, பேச நேரமும் இல்லை என்பதே உண்மை!

நவீன யுகப்பெண்களுக்கு திண்ணைக்கு பதில் இப்படி பேசும் இடமாக மாறியிருக்கிறவைகள் ஃபேஸ்புக், ட்விட்டர் போன்ற சமூக வலைதளங்களே! சமையல் அனுபவங்களில் ஆரம்பித்து, சமூகப் பிரச்சனைகள் வரை இங்கே பெண்கள் உரையாடுகிறார்கள். எப்போதோ பள்ளிக்காலத்தில் தோழியாக இருந்து, இடையில் தொடர்பற்றுப் போனவரை இங்கே கண்டெடுக்கும் பரவசம் பலருக்குக் கிடைக்கிறது. கடலூரில் இருக்கும் பெண், கலிபோர்னியாவில் இருக்கும் தன் தோழியுடன் உரையாடுவது சாத்தியம். மனங்களை இணைக்கும் மகத்தான பாலமாக இருக்கிறது இணையம்.

இந்த இனிமைகள் ஒரு பக்கம் என்றால், ஆபத்துகளும் இன்னொரு பக்கம் உண்டு. வீட்டுக்கு வெளியே வரும் பெண், நிஜ வாழ்வில் இங்கு எத்தனை விதமான பிரச்சனைகளை சந்திக்க நேருமோ, அத்தனை பிரச்சனைகளும் சோஷியல் மீடியாவிலும் உண்டு. வசைபாடல்கள், தனிமனிதத் தாக்குதல்கள், புகைப்படத்தை மார்ஃபிங் செய்து ஒழுக்கத்தைக் கேள்விக்குறி ஆக்குவது, வழக்குகளில் சிக்க வைப்பது என்று சகலமும் நிகழ்கிறது.



## சமூக வலைதளங்களில் பெண்கள் தவிர்க்க வேண்டிய விஷயங்கள்

- யாரோடு பழகலாம், எதைப் பகிர்ந்துகொள்ளலாம் என்ற எல்லைகள் புரிந்து செயல்பட வேண்டும்.
- ஆதரவாகப் பேசுவது போல பழகும் பலர், உங்கள் தொலைப்பேசி எண்ணைக் கேட்பார்கள். அறிமுகம் இல்லாத நபர்களுக்கு உங்கள் நம்பரைக் கொடுக்க வேண்டாம்.
- உங்களைப் பற்றிய பர்சனல் தகவல்களை எல்லோரும் பார்க்கும்படி வைக்காதீர்கள்.
- முழுமையான பிறந்த தேதியை எங்கும் வெளிப்படையாகக் குறிப்பிடாமல் இருப்பது நல்லது. இணையத்தில் உலவும் சைபர் க்ரைம் ஆசாமிகளுக்கு ஒருவரின் பிறந்த தேதிதான் முதன்மையான இலக்கு.
- நிஜ வாழ்க்கையில் எப்படி நட்புக்களை தேர்ந்தெடுத்து வைத்துக் கொண்டு பழகுகிறீர்களோ, சோஷியல் மீடியாவிலும் அப்படித்தான். அறிமுகம் இல்லாதவர்களின் நட்பு அழைப்புகளை தயவு தாட்சண்யம் இல்லாமல் தவிர்த்துவிடுங்கள்.
- பிள்ளைகள் எந்த பள்ளியில் படிக்கிறார்கள், எப்போது பள்ளிக்குப் போகிறார்கள், கணவர் எங்கு வேலை செய்கிறார் என்பது போன்ற தகவல்களைப் பகிர்ந்துகொள்ளாதீர்கள்.
- நான் வெளியூருக்குச் செல்கிறேன், பத்து நாட்கள் ஊரில் இருக்க மாட்டேன். குடும்பத்தோடு கொடைக்கானல் போகிறோம் என்றெல்லாம் குறிப்பிடுவது மிக ஆபத்தானது.
- நிறைய பேர் சமூக வலைதளங்களை தங்கள் மொபைல் போன் மூலம் பயன்படுத்துகிறார்கள். அப்படிப் பயன்படுத்தும்போது உங்கள் லொகேஷன் செட்டிங்கை ஆஃப் செய்துவிடுங்கள்.

# மழை வெள்ளங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக விசேஷித்த ஜெபம்!

## (சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி etc.,)

அன்புள்ள தேவனே! சகலவிதமான நட்சத்திரங்களையும், கிரகணங்களையும், பூமியையும் உமது வல்லமையால் படைத்து காத்து வருகிறீர். அத்துடன் கன்மலைகள், ஆறுகள், கடல் மற்றும் மனித குடியிறுப்புகளை படைத்தீர். அதற்காக உம்மை துதிக்கிறோம், ஸ்தோத்தரிக்கிறோம்! (நீதி. 3:19,20; சங்.33:6) மேலும் அவைகள் எல்லாம் எபிரெயர் 1:3–ன் படி உமது வல்லமையுள்ள வசனத்தினால் தாங்கி வழிநடத்துகிறீர் அதற்காகவும் உம்மை துதிக்கிறோம். இப்போதும் பூமியில் பல இடங்களில் நிலநடுக்கங்கள், மழை, வெள்ளங்கள் உம்முடைய மக்களை தாக்குவதை அறிகிறோம். விசேஷமாக எங்கள் தமிழ்நாட்டில் பல இடங்களில் ஏற்பட்ட கடுமை யான வெள்ளங்களையும், மழைகளையும் நீர் அடக்கி உம்முடைய வல்லமையுள்ள வசனத்தினால் நிறுத்துவீராக.

எங்களிடத்தில் காணப்படும் எல்லா குறைகளையும் மன்னித்து நீதி, அன்பு, சகோதரத்துவம் தழைத்தோங்க கிருபை செய்யும். உமது பார்வைக்கும், உம்முடைய வார்த்தைகளுக்கும் மிஞ்சினது ஒன்றுமில்லை. எனவே ஏசாயா 25:4–ன்படி கொடூரமான வெள்ளங்களிலிருந்தும் அதின் பாதிப்பிலிருந்தும் ஏழை மக்களை காப்பாற்றி மறுபடியும் அவர்கள் சிறப்பாக வாழ உதவி செய்யும்.

வெள்ளம் போல சத்துருவானவன் உம்முடைய மக்களுக்கு விரோதமாக வரும்பொழுது உம்முடைய வல்லமையுள்ள ஆவியானவர் அவனுக்கு விரோதமாக கொடி ஏற்றுவாராக! (ஏசாயா 51:19) ஏசாயா 32:2–ன்படி பயங்கரமான காற்றுக்கு ஒதுக்காகவும், பெரு வெள்ளத்திற்கு தப்பும் புகழிடமாகவும் இருப்பீராக. இடிந்த, பாழான வீடுகள் திரும்பவும் கட்டப்படவும், ஜீவனை இழந்த மக்களின் குடும்பங்களை ஆறுதல்படுத்தவும், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பலவித நோய்களை கொண்ட மக்களை சுகமாக்கவும் மிகுந்த தாழ்மையோடு உம்மை வேண்டுகிறோம்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீர் தாமே உயர்ந்த அடைக்கலமாகவும், பெலனாகவும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையாகவும் இருந்தருளும். உமது மிகுந்த இரக்கத்தின் படி ஏழைகள், வறியவர்கள், விதவைகள், ஆதரவற்றவர்கள், பணவசதி இல்லாதவர்கள், மீனவர்கள், கடல் ஓரத்தில் வசிப்பவர்கள், சாதாரண தொழில் செய்பவர்கள், வயதானவர்கள் இவர்களை எல்லாம் உம்முடைய அன்பு கரம் கொண்டு காப்பாற்றும். மக்களுக்கு சீக்கிரமாய் நற்சீர் நிலையை தந்து திரும்பவும் அவர்கள் வாழ்க்கையை உயர்த்தி இழந்த எல்லாவற்றையும் இரட்டிப்பாக தந்து ஆசீர்வதியும். ஜனங்கள் உம்மை அதிகமாக தேடும்படி செய்யும், அநீதியான கொலைகள், கொள்ளைகளை எல்லாம் உம்முடைய வல்லமையால் முறியடித்தருளும். பரலோகத்திலிருந்து மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை நோக்கி பாரும். மழையும், வெள்ளங்களும், நில நடுக்கங்களும் மீண்டும் வராதபடி காத்துக் கொள்ளும். இயேசுவின் நாமத்தில் வேண்டிக் கொள்கிறோம் பரிசுத்த பிதாவே! ஆமென்.







# தேவாதி தேவன் அவருடைய நாம மகிமைக்காக செய்த அற்புதங்களில் சிலவற்றை உங்கள் ஆசீர்வாதத்திற்காக பிரசுரிக்கிறோம்

## காதில் இருந்த பிரச்சனை ஒரு நொடிப்பொழுதில் நீங்கியது!



நான் கூட்டத்திற்கு வரும்பொழுது பயங்கரமான காது வலியுடன் வந்தேன். வீட்டில் என் மனைவிக்கும் உடல் நிலை சரியில்லை. ஆகவே மிகவும் மனம் சோர்ந்துபோன நிலையில் தான் நவம்பர் மாதம் திருச்சியில் நடைபெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்துக் கொண்டேன்.

ஜெப வேளையில் **Rev.Dr.A.** ஜாஷ்வா அவர்கள் தீர்க்கதரிசனமாக சொன்னார்கள். ஒரு நபர் காது வலியுடன் இந்த கூட்டத்திற்கு வந்திருக்கிறீர்கள், கர்த்தர் அவருக்கு இப்பொழுது பரிபூரண சுகத்தைத் தருகிறார் என சொன்னநொடிப் பொழுதில் என் காதில் நீண்டநாளாக இருந்த அந்த காதுவலி பிரச்சனை முற்றிலும் நீங்கியது. அற்புத சுகம் கொடுத்த கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன்.

– திரு. மார்ட்டின் டேனியல் ஜெயக்குமார், முசிறி.

## அற்புத சுகத்தையும், பாதுகாப்பையும் கர்த்தர் தந்தார்!



நான் முசிறியில் வசித்து வருகிறேன். என் பெற்றோர் நாகர்கோவிலில் இருக்கிறார்கள். கடந்த வருடம் என் அம்மா கொரோனா நோயினால் பாதிக்கப்பட்டார்கள். மூச்சுவிட அதிக சிரமம் ஏற்பட்டது. lungs பெலவீனமாய் இருக்கிறது என மருத்துவர்கள் சொன்னார்கள்.

அந்த நேரத்தில் திருச்சியில் குடும்ப ஆசீர்வாதக் கூட்டம் நடைபெறயிருந்தது. நான் அந்த கூட்டத்தில் keyboard வாசிப்பேன். ஆகவே பாஸ்டர் Rev.Dr.A.ஜாஷ்வா அவர்களிடம் என் அம்மாவிற்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் நான் உடனே போகவேண்டும். கூட்டத்திற்கு வர முடியவில்லை என்பதை போன் வாயிலாக தெரிவித்தேன்.

அப்பொழுது பாஸ்டர் ஜாஷ்வா அவர்கள் சொன்னார்கள், நீங்கள் கூட்டத்திற்கு வாருங்கள். உங்கள் அம்மாவிற்காக நான் ஜெபிக்கிறேன். அவர்கள் சுகமாவார்கள் என சொன்னார்கள். நானும் விசுவாசத்துடன் கூட்டத்திற்கு வந்து விட்டேன். கூட்டம் முடிந்த பிறகு என் அப்பா, போன் செய்து நீ வர வேண்டாம் அம்மா நன்றாக இருக்கிறார்கள் என சொன்னார்கள். அற்புத சுகத்தை கொடுத்த கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். அம்மாவுக்காக ஜெபித்த போதகருக்கும் நன்றி.

அதுமட்டுமல்ல, சமீபத்தில் என் அம்மாவிற்கு திடீரென நெஞ்சுவலி வந்தது, அதிலிருந்தும் கர்த்தர் என் அம்மாவை ஜீவனுடன் பாதுகாத்தார். கர்த்தருக்கே ஸ்தோத்திரம்!

– திரு. பிராங்களின், முசிறி.

## என் கண்ணை தொட்ட இயேசு!



நான் செய்கிற வியாபாரத்தின் நிமித்தம் தினந்தோறும் 100 கி.மீ. வரை வண்டியில் பயணம் செய்கிறேன். என்னுடைய இடது கண்ணில் ஒரு வித flickering ஏற்படும். அந்த பிரச்சனையோடு தான் நான் வண்டியை ஓட்டி வருகிறேன்.

கடந்த நவம்பர் மாதம் திருச்சியில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் Rev.Dr.A.ஜாஷ்வா அவர்கள் நோயாளிகளுக்காக விசேஷித்த ஜெபத்தை ஏறெடுத்தார்கள். அந்த நேரத்தில் நோயினால் கஷ்டப்படுகிறவர்கள் வியாதி உள்ள இடத்தில் கைகளை வைத்து ஜெபிக்கும்படி பாஸ்டர் சொன்னார்கள். நானும் விசுவாசத்துடன் என் இடது கண்ணில் கை வைத்து ஜெபித்தேன். கர்த்தர் தாமே அற்புதமாக இரங்கினார். flickering பிரச்சனை குறைந்திருக்கிறதையும், முன்பை விட தெளிவாக பார்க்க முடிகிறது என்பதையும், என்னால் நன்கு உணர முடிகிறது. என்னை தொட்டு சுகமாக்கிய கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். – திரு. நாகராஜ், புலியூர்.

Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2022-2024 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month

# உங்கள் ஆசீர்வாதத்தின் நாள்



தேவசெய்தி
Rev.Dr.A. ஜாஷ்வா

## தாம்பரம்

நாள் : ஜனவரி 15 திங்கள் கிழமை (அரசுவிடுமுறை)
நேரம் : காலை 9:30 முதல் மதியம் 1:00 மணி வரை
இடம் : J.J. மஹால், L.K.S. தங்க மாளிகை எதிரில்,
G.S.T. மெயின் ரோடு, கடப்பேரி,மேற்கு தாம்பரம், சென்னை.

## வேலூர்

நாள் : ஜனவரி 16 செவ்வாய் கிழமை( அரசு விடுமுறை)
நேரம் : காலை 9:30முதல் மதியம் 1:00மணி வரை
இடம் : ஏலிம் கார்டன், வேலூர் புதிய பஸ் நிலையம் எதிரில்,
சர்வே எண்:605, பாலதோரம் தெரு, வேலூர்.

## ஈரோடு

நாள் : ஜனவரி 17 புதன் கிழமை (அரசு விடுமுறை)
நேரம் : காலை 9:30முதல் மதியம் 1:00மணிவரை
இடம் : C.S.I.பாரிஸ் ஹால், டெலி போன் பவன் அருகில்,
பிரப் ரோடு, ஈரோடு.

## நாகர்கோவில்

நாள் : ஜனவரி 26 வெள்ளிக்கிழமை (அரசு விடுமுறை)
நேரம் : காலை 9:30 முதல் – 1:00 மணி வரை
இடம் : அபிஷேக் காம்ப்ளக்ஸ், மெத்தை கடை மாடி,
WCC ரோடு, நாகர்கோவில்

தொடர்புக்கு: 0431-2741922, 94888 45627

## சென்னையில்
## அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

ஜனவரி 26 (வெள்ளிக்கிழமை)அரசு விடுமுறை
காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை
BKN மெயின் ஹால், ரித்தர்டன் ரோடு,வெப்பேரி, சென்னை

தேவ செய்தியாளர்கள்
Dr. ஆனந்த ஸ்திரா, Mrs. மார்கிரேட் ஸ்திரா
(கூட்ட முடிவில் தனிஜெபம் ஏறெடுக்கப்படும்)



தொடர்புக்கு : 0431– 2741922, 94888 45627,

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,